# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

43

யாழ். குடாநாட்டில் சாதி அமைப்புக்கெதிராக போராட்டம் நடத்திய காந்தியவாதிகள் -மற்றும் திராவிட இயக்கவாதிகளுக்கும் நா. சண்முகதாசன் தலைமையில் இயங்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் வெகுசன அமைப்பான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்திற்கும் உள்ள அடிப்படை வேற்றுமை போராட்ட வடிவம் பற்றியது.

முன்னையவர்கள் சாதி அமைப்பை எந்தவித கேள்விக்கும் உள்ளாக்காமல், அதைத் காப்பாற்றி வைத்துக்கொண்டு, அதாவது அதனுடைய கோட்பாடுகள், மனிதனை மனிதன் இழிவு செய்யும் அதன் கருத்தியல் வடிவங்கள் எல்லாவற்றையும் தயவு தாட்சண்யமின்றி தூக்கி எறிவதற்குப் பதிலாக அதையெல்லாம் அப்படியே உள்ளது உள்ளபடி காப்பாற்றி வைத்துக்கொண்டு கசப்பு மருந்துக்கு இனிப்பு பூசிக்கொடுப்பது போல காலம், இடம், சூழலுக்கு ஏற்ப தீண்டாமையின் கூர்மையை குறைக்க முனைந்திருக்கிறார்கள். இப்படிச் சொல்கின்றபோது, பிற்பாடு தேவைப்பட்டால் அதை பழையபடி கூர்மையாக்கலாம் என்று அர்த்தமாகும். இவர்களுடைய நடவடிக்கைகளை எல்லோருக்கும் எளிதில் புரியும்படி சொல்வதானால், இன்று தமிழர்கள் என்ற வகையில் ஒரு இனத்தையே அழித்துக்கொண்டிருக்கும்; தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக, அடிமைகளாக அடித்து அடித்து விரட்டிக்கொண்டிருக்கும் சந்திரிகாவின் ஆளும் பொது சன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் தமிழர்களின் உரிமைகளுக்காக பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், பத்திரிகைகளில் கண்டன அறிக்கை என்று .மாபெரும் போராட்டங்கள் நடத்திக் கொண்டிருப்பதாக பாசாங்கு செய்துகொண்டிருக்கும் தமிழ் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு ஒப்பானதாகும்.

**மனிதனை மனிதன் இழிவு செய்யும் அதன் கருத்தியல் வடிவங்கள் எல்லாவற்றையும் தயவு தாட்சண்யமின்றி தூக்கி எறிவதற்குப் பதிலாக அதையெல்லாம் அப்படியே உள்ளது உள்ளபடி காப்பாற்றி வைத்துக்கொண்டு கசப்பு மருந்துக்கு இனிப்பு பூசிக்கொடுப்பது போல காலம், இடம், சூழலுக்கு ஏற்ப தீண்டாமையின் கூர்மையை குறைக்க முனைந்திருக்கிறார்கள்.**

ஆனால் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், சகல விதத்திலும் சாதி அமைப்பை கேள்விக்குள்ளாக்கியது. தமிழ் மக்கள் மத்தியில் இந்து மதத்தின் பேரால் சாதி எவ்வாறு ஆழமாக வேரூன்றி அவர்களது சிந்தனையை மழுங்கடித்து மக்களைப் பிரித்து வருகின்றது என்பதை விளக்குவதற்கு கருத்தியல் ரீதியான போராட்டங்களையும் அது மேற்கொண்டது. அக்காலப் பகுதியில் குடாநாடெங்கும் நடாத்தப்பட்ட 'குடிநிலம்' 'கந்தன் கருணை' ஆகிய நாடகங்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## கண்திறக்க வைத்த 'கந்தன் கருணை'

'குடிநிலம்' நாடகம், ஒடுக்கப்பட்ட மக்களின் குடியிருப்பு நிலம் பற்றிய பிரச்சினையை அழகாகச் சித்தரித்த ஒரு நாடகமாகும்.

'கந்தன் கருணை' நாடகம் புராண நாடகப் பாணியில் அமைந்தது. இந்து மதமும் சாதியும் பிரிக்க முடியாதவை. சாதி குறைந்தவர்களை கோவில்களுக்குள் விட்டால் கோவிலின் புனிதம் கெட்டுவிடும் என்று மக்களை ஏமாற்றி வந்த சாதி வெறியர்களை, மக்களுக்கு இனங்காட்டும் விதத்தில் இந்த நாடகம் அமைந்திருந்தது.

இந்த நாடகத்தில் யாழ் மக்களின் குல தெய்வமான முருகனுக்கு இரு மனைவிகள். முதல் மனைவி தெய்வானை, இந்திரனின் மகள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவள். இரண்டாவது மனைவி வள்ளி, குறவர் குலத்தைச் சேர்ந்தவர்கள். எப்போதும் கலகம் ஏற்படுத்துபவராக இந்து மத புராணங்களில் சித்தரிக்கப்படும் நாரதர் முருகனிடம் வந்து 'முருகா யாழ்ப்பாணத்தில் உன்னுடைய மனைவியான வள்ளியின் குலத்தையொத்தவர்களை உன்னுடைய ஆலயத்திற்குள்ளேயே விடுகின்றார்கள் இல்லை. அங்கே ஒரு பெரிய போராட்டமே நடந்து கொண்டிருக்கிறது' என்று முறையிடுகிறார்.

முருகனுக்கு அடக்க முடியாத கோபம் ஏற்படுகிறது. தன்னுடைய கோவிலுக்குள் மக்களை செல்ல விடாமல் தடுப்பவர்களுக்குத் தண்டனை கொடுக்கப் பூலோகம் புறப்படுகிறார்.

அப்போது தெய்வானை 'நாதா நீங்கள் பூலோகம் செல்லாதீர்கள். பொலீஸ்காரர்கள் அவர்கள் பக்கம் இருக்கிறார்கள். அவர்கள் உங்களை ஆகம விதிகளை மீறி கோவிலுக்குள் சென்று குழப்பம் விளைவித்த குற்றத்துக்காக பிடித்துச் சென்று பொலிஸ் ஸ்ரேசனில் அடைத்து வைத்து விடுவார்கள் என்று தடுக்கிறாள். ஆனால் அதைக் கேட்காது அங்கு சென்ற முருகன் கொடுமையான சாதி அடக்கு முறை இருப்பதைப் பார்த்து ஆத்திரமடைகிறார். ஆலயப் பிரவேசம் செய்யப் போராட்டம் நடக்கும் கோவில் ஒன்றுக்குள் அவர் செல்ல முற்படுகின்றார்.

அங்குள்ள சாதிமான்கள் அவருடைய பெயரைக் கேட்கிறார்கள். அவர் 'கந்தன்'என்கிறார். ஓ! நீ சாதி குறைந்தவன் உள்ளே போகமுடியாது என்று கூறி அவரை வெளி தள்ளி விடுகின்றார்கள். ஆத்திரம் கொண்ட முருகன், அவர்களைத் தண்டிக்க தனது 'வேலை' எடுக்கிறார்.

உடனே நாரதர் குறுக்கிட்டு பிரபுவே, நீங்கள் இவர்களை தண்டிக்க வேண்டாம். உங்களுடைய வேலாயுதத்தை போராடுகின்ற மக்களிடம் கொடுங்கள் அவர்கள் பாவிக்கட்டும் என்று கூறுவதாக நாடகம் முடிகிறது.

இந்த நாடகம், அந்தக் கால கட்டத்தில் மிகப் பெரிய வரவேற்பையும் மிகப் பெரிய எழுச்சியையும் உண்டாக்கியது.


இந்த நாடகம் நடந்த சில மேடைகளில் நாடக நடிகர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும், அதற்கு வேலையும், தம்புராவையும் ஆயுதமாகப் பயன்படுத்தி பதிலடி கொடுத்த சம்பவங்களும் நடந்திருக்கின்றன.



தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முயற்சியால் ஒரே நேரத்தில் குடாநாடு தழுவிய அளவில் ஆலயப்பிரவேசப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இவற்றில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் போராட்டத்தையும், மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவில் போராட்டத்தையும் முக்கியமாகக் குறிப்பிடலாம்.

**வெளிப்படையாக தன்னை இனங்காட்டிக் கொண்டு செயற்பட்டவர் அடங்காத்தமிழன் பேராசிரியர் சி. சுந்தரலிங்கம். மாவிட்டபுரம் கோவிலுக்குள் மக்களை உள்ளே செல்லவிடாமல் தடுத்ததற்காக மல்லாகம் நீதிமன்றம் அவரைக் குற்றவாளியாகக்கண்டு 50 ரூபா அபராதம் விதித்தது.**

மாவிட்டபுரம் சந்தசுவாமி கோவிலுக்குள் செல்வதற்கு நடந்த போராட்டம், பல மாதங்கள் நடந்தது. இந்தக் கோவிலுக்குள் ஒடுக்கப்பட்ட மக்களை உள்ளே விடுவதைத் தடுப்பதற்கு அக் காலத்தில் தாங்கள் தமிழர்களின் உரிமைக்காக போராடுபவர்கள் என்று காட்டிக்கொண்டிருந்த பலரும், பின்னணியில் இருந்து செயற்பட்டனர். அவர்களில் பின்னணியில் இருந்தவர்களில் வெளிப்படையாக தன்னை இனங்காட்டிக் கொண்டு செயற்பட்டவர் அடங்காத்தமிழன் பேராசிரியர் சி. சுந்தரலிங்கம். மாவிட்டபுரம் கோவிலுக்குள் மக்களை உள்ளே செல்லவிடாமல் தடுத்ததற்காக மல்லாகம் நீதிமன்றம் அவரைக் குற்றவாளியாகக்கண்டு 50 ரூபா அபராதம் விதித்தது. அவர் 'தான் செய்தது சரி இந்து ஆகம விதிகளின் படி சாதி குறைந்தவர்கள் கோவிலுக்குள் செல்லக்கூடாது' என்று கூறி அந்த வழக்கை இலண்டனிலிருந்து பிறிவுக் கவுன்சிலுக்கு அப்பீல் செய்திருந்தார்.



மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவில் பங்குனி உத்தரத் திருவிழாவின்போது சாதி குறைந்தவர்களை உள்ளே விடாமல் தடுப்பதற்காக ஆலய வளாகத்தைச் சுற்றி கம்பிவேலித் தடுப்பு அமைக்கப்பட்டிருந்தது. செல்லக்கிளி என்ற பெண் பொங்கல் பானையில் இருந்த அரிசிக்குள் நாட்டு வெடி குண்டை மறைத்து எடுத்துச் சென்று வெடிக்க வைத்ததும், அதன் பின் தாழ்த்தப்பட்டவர் அங்குள்ள கிணற்றிலும் தீர்த்தக் கேணிகளிலும் தண்ணீர் அள்ளி கைகால் அலம்பி ஆலயப் பிரவேசம் செய்ததும் அக்காலத்தில் பரபரப்பை ஊட்டிய சம்பவங்களாகும்.

இவ்வாறு தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தினர் கருத்தியல் ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் நடத்திய போராட்டங்களினால் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளான சாதி அபிமானிகள் பதிலுக்கு மிகவும் கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

சாதி குறைந்தவர்களின் வீடுகளை தீ வைத்துக் கொழுத்தியது அவர்களின் பயிர்களை நாசம் செய்தது; அவர்களது குடிதண்ணீர் கிணறுகளில் நஞ்சு கலந்தது என்று இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றில் இரண்டு முக்கியமான சம்பவங்கள், சாதி வெறியின் ஆழமான வடுக்கள் என்பதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஒன்று, ஒடுக்கப்பட்ட மக்களின் பிள்ளைகளின் பாடசாலைப் புத்தகங்களைப் பறித்து தீயிட்டு எரித்தது.

இரண்டாவது, தென்னை மரத்தில் இருந்த சாதி குறைந்த ஒருவரை மரத்தோடு சேர்த்து தறித்து விழுத்தியது.

1960-க்கும் 1970-க்கும் இடையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் போராட்டங்கள், எந்தளவுக்கு சாதியை ஒழித்தது? சாதிக்கும், தீண்டாமைக்கும் எதிராகப் போராடிய நா. சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி அக்காலகட்டத்தில் முளைவிட ஆரம்பித்த தமிழ் தேசிய இன ஒடுக்குமுறையை எந்த அடிப்படையில் பார்த்தது. இவை இரண்டும், ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய விடயங்களாகும்.

**- நக்கீரன்**